பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 10 செவ்வாய்க்கிழமை 26.07.2022 கதிர் 152

## விரைவில் சீனாவுக்கு பறக்கின்றார் ரணில்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சீனாவுக்குச் செல்லத் திட்டமிட்டுள்ளார் என்று சீனாவுக்கான இலங்கைத் தூதுவர் பாலித கொஹொன தெரிவித்துள்ளார்.

வர்த்தகம் முதலீடு மற்றும் சுற்றுலா

☞2



## ஒகஸ்ட் மாதத்தில் இடைக்கால ‘பட்ஜட்’

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசின் இடைக்கால வரவு – செலவுத் திட்டம் அடுத்த மாதத்துக்குள் முன்வைக்கப்படவுள்ளது.

இந்தத் தகவலை அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு அரச தகவல் திணைக்களத்தில் இன்று நடைபெற்றது. இதன்போதே அமைச்சர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

# அழைப்பு இன்னும் வரவில்லை; ரணிலை எதிர்க்கவேமாட்டோம்!

## சர்வகட்சி அரசு தொடர்பில் மனோ எம்.பி. இப்படி பதில்



தேசிய அரசு அல்லது சர்வகட்சி அரசு அமைப்பது தொடர்பில், அரசிடமிருந்து எமக்கு இதுவரை அதிகாரபூர்வ அழைப்பு எதுவும் வரவில்லை. ஏனைய எதிர்க்கட்சிகளுக்கும் அதிகாரபூர்வ அழைப்புகள் வரவில்லை. ஆகவே, அதற்குள் பேச்சுகள் நடக்கின்றன. அமைச்சர்கள் ஆகிறார்கள் என்பவையெல்லாம் வெறும் சுவாரசிய செய்திகளாக மட்டுமே இருக்கின்றன. ஆனால், நாடு இன்று இருக்கும் அவதி நிலையில், ரணில் விக்கிரமசிங்க அரசுக்கு நாட்டை இயல்பு நிலைக்குக் கொண்டுவர அவகாசம் கொடுக்க வேண்டும். அவசரப்பட்டு எதிர்ப்பு அரசியல் ஆர்ப்பாட்டங்களைச் செய்யக்கூடாது.

– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. ஊடகங்களுக்கு நேற்று தெரிவித்தார்.

☞2

‘கோல்பேஸ்’ தாக்குதல்:

## சந்திரிகா கண்டனம்



காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் மீது முன்னெடுக்கப்பட்ட தாக்குதலைக் கண்டித்து முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க கருத்து வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் தெரிவிக்கையில்,

காலிமுகத்திடல் தாக்குதல் மிகவும் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. போராட்டக்காரர்களை

☞2

## பயந்து ஒளியவில்லை கோட்டா; மீண்டும் இலங்கை வருகின்றார்

### அரசு இன்று அறிவிப்பு



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அச்சத்தால் வெளிநாட்டில் பதுங்கித் தலைமறைவாக வில்லை. அவர் சட்டபூர்வமாகவே வெளிநாடு சென்றுள்ளார்.

– இவ்வாறு அமைச்சரவைப்பேச்சாளரும்அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

கோட்டாபய நாடு திரும்புவார் என நம்பிக்கை வெளியிட்ட அமைச்சர், வரும் திகதி, விவரம் குறித்த தகவல்கள் தனக்குத் தெரியாது எனவும் கூறினார்.

☞2



## தங்கம் கடத்த முயன்ற மூவர் மடக்கிப் பிடிப்பு

(ந.லோகதயாளன்)

இலங்கையில் இருந்து இந்தியாவுக்குத் தங்கம் கடத்த முயன்ற மூவர் கடற்படையினரால் மன்னாரில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

☞2

## சகல தமிழ், முஸ்லிம் கட்சிகளும் சர்வகட்சி அரசில் சேர வேண்டும்

### பிரதமர் தினேஷ் அழைப்பு



நாட்டை மீட்டெடுக்க சர்வ கட்சி அரசே தேவையானது. அனைத்துத்தமிழ், முஸ்லிம் கட்சிகளும் தமது கட்சிகளை வளர்ப்பதை விடுத்து சர்வ கட்சி அரசில் இணைந்து நாட்டைவளப்படுத்தவேண்டும்.

– இவ்வாறு புதிய பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:–

தற்போதைய ஆட்சியில் சிறுபான்மையினர், பெரும்பான்மையினர் என்ற பேதம் இருக்கக் கூடாது. அதே வேளை சிறுபான்மைக்கட்சியினர், பெரும்பான்மையினக் கட்சியினர் என்ற பேதமும் இருக்கக் கூடாது.

☞2

## சபை முதல்வராகின்றார் சுசில்



நாடாளுமன்றத்தில் சபை முதல்வராகக் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவை நியமிப்பதற்கு ஆளுங்கட்சி எம்.பிக்கள் தீர்மானித்துள்ளனர்.

சபை முதல்வராகச் செயற்பட்ட தினேஷ் குணவர்தன தற்போது பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அண்மையில் ஆளும் கட்சியில் இருந்து விலகி சுயாதீன உறுப்பினராகச் செயற்பட்ட

☞2

## சஜித் அணிக்கு 8 அமைச்சுக்கள்?



எதிர்காலத்தில் அமைக்கப்படவுள்ள அனைத்துக் கட்சி உள்ளடங்கிய அரசில் இணையுமாறு ஐக்கிய மக்கள் சக்திக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அக்கட்சியைச்சேர்ந்த 8 எம்.பிக்கள் அமைச்சர்களாகப் பதவியேற்க அரசு முன்மொழிந்துள்ளது எனவும் தெரியவந்துள்ளது.

அடுத்த 15 நாள்களில் சர்வகட்சி அரசு அமைக்கப்படும் வரை தற்போதைய அமைச்சரவை இடைக்கால

☞2

## 3 உயர் பதவிகளுக்கு புதியவர்கள் நியமனம்

திணைக்களங்களின் உயர் பதவிகளுக்குப் புதிதாக மூவர் நியமிக்கப்பட்டுள்ளனர் என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அதற்கமைய இலங்கை சுங்கத்தின் பணிப்பாளர் நாயகமாக பீ.பி.எஸ்.சி. நோனிஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை சுங்கத்தின் புதிய பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டுள்ள அவர், முன்னதாக பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளராகச் செயற்பட்டு வந்தார்.

இதேவேளை, உள்நாட்டு

☞2

## தமிழகத்தின் மூன்றாம் கட்ட உதவிப் பொருள்கள் வழங்கல்




இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே தமிழக அரசால், இலங்கை அரசுக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட 3.4 பில்லியன் மதிப்பிலான

☞2

## வெள்ளவத்தைக் கடற்கரையில் இனந்தெரியாத ஆணின் சடலம்

கொழும்பு – வெள்ளவத்தைக் கடலோரக் காவல்படை முகாமுக்கு அருகில் உள்ள கடற்கரையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

வெள்ளவத்தைப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து இன்று காலை குறித்த

☞2

## இலங்கைச் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்ட போலந்துப் பிரஜையே தமிழகத்துக்குள் ஊடுருவல்!

### பொலிஸாரிடம் சிக்கிய அவரிடம் தீவிர விசாரணை



(ந.லோகதயாளன்)

கடல் வழியாக சட்டவிரோதமான முறையில் இலங்கையிலிருந்து தமிழகத்துக்குச் சென்ற போலந்து நாட்டவர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தமிழகத்தின் வேதாரண்யம் அருகே உள்ள முனங்காடு பகுதியில் கைவிடப்பட்டிருந்த நிலையிலிருந்த படகொன்று தமிழகப் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டிருந்தது.

இப்படகு காற்றலை மூலம், இருவர் பயணம் செய்யக் கூடியது என்று தமிழகப் பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

மேலும் சுழியோடிகள் பாவிக்கும் காலணி, படகுக்கு

☞2

## சஜித் அணிக்கு ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சரவையாகச் செயற்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தைத் தொடர்ந்து புதிய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க அண்மையில் பதவி ஏற்றார். அதனைத் தொடர்ந்து 18 பேர் கொண்ட இடைக்கால அமைச்சரவை பதவியேற்றது.

இந்த அமைச்சரவையில் ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து வெளியேறிய இருவர் அமைச்சுப் பதவிகளை ஏற்றுள்ளனர். இந்தநிலையில் ஏனைய ஆளும் தரப்பு மற்றும் எதிர்த்தரப்பில் உள்ள கட்சிகள், குழுக்களுக்கு அமைச்சுப் பதவி வழங்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளார். இதன்படி அவற்றுடன் இன்று முதல் பேச்சு ஆரம்பமாகியுள்ளது.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பிக்கள் சிலர் கட்சியிலிருந்து வெளியேறி அரசுடன் இணைந்து அமைச்சுப் பதவியை ஏற்கும் நோக்குடன் இரகசியப் பேச்சுக்களில் ஈடுபட்டு வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## தமிழகத்தின் மூன்றாம் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனிதாபிமானப் பொருள்களை இன்று இலங்கை அரசிடம் கையளித்தார்.

தமிழக அரசின் மூன்றாம் கட்ட இந்த நன்கொடைகளை வெளிவிவகார அமைச்சர் அலி சப்றி மற்றும் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல ஆகியோரிடம் கொழும்புத் துறைமுகத்தில் வைத்து இந்தியத் தூதுவர் கையளித்தார். இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

தமிழகத்தில் இருந்து 40 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி, 500 மெற்றிக் தொன்பால்மா மற்றும் 100 மெற்றிக் தொன் மருந்துகள் (மருந்துகளின் மொத்த மதிப்பு சுமார் 22 மில்லியன் அமெரிக்க டொலர்கள்) ஆகிய பொருள்கள் நன்கொடையாக இலங்கைக்கு வழங்கப்பட்டன என்று டுவிட்டர் செய்தியில், இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே கூறியுள்ளார்.

## சபை முதல்வராகின்றார் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுசில் பிரேமஜயந்த கடந்த 20ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நடைபெற்ற ஜனாதிபதி வாக்கெடுப்பில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதாக ஏற்கனவே பகிரங்கமாக அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கைச் சிறை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காற்று நிரப்பும் கருவி, உயிர்பாதுகாப்பு கவசங்கள், சுழியோடிகள் கடலினுள் பாவிக்கும் கண்ணாடிகள், 18 இற்கும் மேற்பட்ட தண்ணீர்ப் போத்தல்கள், மிதவைகள் என்பவற்றுடன் படகுக்கு அருகில் இருந்து மேலும் சில பொருள்களும் மீட்கப்பட்டிருந்தன.

இலங்கையில் இருந்து இந்தப் படகின் மூலம் வந்தவர்கள், தமிழகத்தினுள் ஊடுருவி இருக்கலாம் எனத் தமிழகக் கடலோரப் பாதுகாப்புப் பிரிவினர் சந்தேகம் கொண்டு, க்யூ பிரிவினருடன் இணைந்து தீவிர விசாரணைகளை முன்னெடுத்தனர்.

அதன் விளைவாக வேதாரண்யம் பகுதிக்கு அருகில் உள்ள ஆறுகாட்டுப் பகுதியில் வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடுகின்றார் என்று கிடைத்த தகவலின் அடிப்படையில் அங்கு விரைந்த பொலிஸார் அவரைக் கைதுசெய்தனர்.

அப்பகுதிகளில் மோப்ப நாய்களின் உதவியுடனும், ட்ரோன் கமராக்கள் மூலமும் பொலிஸார் தீவிர தேடுதல் நடத்தினர்.

கைதுசெய்யப்பட்டவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் அவர் போலந்து நாட்டைச் சேர்ந்தவர் என்றும், இலங்கையில் விசா விதிமுறைகளை மீறி தங்கியிருந்த குற்றத்தில் கைதாகி சிறைத்தண்டனை அனுபவித்து, தண்டனைக்காலம் முடிவடைந்து விடுதலை செய்யப்பட்டவர் என்றும் தெரியவந்துள்ளது.

இலங்கையில் இருந்து கடவுச்சீட்டின்றி சட்டவிரோதமான முறையில் தமிழகத்தினுள் ஊடுருவிய குற்றச்சாட்டில், குறித்த நபர் தொடர்பான மேலதிக விசாரணைகளைத் தமிழகப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## 3 உயர் பதவிகளுக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகமாக டீ.ஆர்.எஸ். ஹப்பு ஆராச்சியும், திறைசேரியின் பிரதி செயலாளராக டபிள்யூ.ஏ.சத்குமாரவும் நியமிக்கப்பட்டுள்ளனர் என்று அமைச்சரவைப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

## பயந்து ஒளியவில்லை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு அரச தகவல் திணைக்களத்தில் இன்று நடைபெற்றது. இதன்போது எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தகவல் வெளியிட்டார்.

அதேவேளை, சர்வகட்சி அரசமைப்பதற்கான ஏற்பாடுகள் அரசமைப்பின் பிரகாரமே இடம்பெறும் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

## தங்கம் கடத்த முயன்ற .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்னாரில் இருந்து ஒரு படகு மூலம் சட்டவிரோதமாகத் தங்கம் மற்றும் வலம்புரிச் சங்கு என்பவற்றைக் கடத்தியவேளை கடற்படையினர் அவற்றைக் கைப்பற்றியுள்ளனர்.

இவற்றை எடுத்துச் சென்ற குற்றச்சாட்டில் மூவர் கைதுசெய்யப்பட்டனர். அத்துடன் இவர்கள் பயணித்த படகும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட தங்கம், வலம்புரிச் சங்கு மற்றும் படகுடன் சந்தேகநபர்கள் மூவரும் சுங்கத் திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர்.

## சகல தமிழ், முஸ்லிம் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் – முஸ்லிம் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் அனைத்தும் தீர்க்கமான முடிவை எடுக்கவேண்டும். அரசுக்கு முழுமையான ஆதரவை வழங்க வேண்டும். நாடு தற்போது நெருக்கடியான நிலைமையைச் சந்தித்துள்ளது. அதிலிருந்து மீண்டு எழவேண்டும்.

இந்தநிலையில், மக்கள் பிரதிநிதிகள் தங்களுடைய கட்சிகளை வளர்ப்பதை நோக்கமாகக் கொள்ளாமல் நாட்டினதும் மக்களினதும் நலன் கருதி தீர்க்கமான முடிவு எடுத்து சர்வகட்சி அரசுக்கு ஆதரவு வழங்கவேண்டும் – என்றார்.

## சந்திரிகா .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கிருந்து அகற்றவேண்டும் என்றால் பொலிஸாரைக் கொண்டு அதனைச் செய்திருக்கவேண்டும். அதைவிடுத்து முப்படையினரையும் களமிறக்கி ஆயுத பலத்தைக் கொண்டு தாக்குதல்களை நடத்தி போராட்டக்காரர்களை அப்புறப்படுத்தியமை வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

ஜனநாயக வழியில் போராடும் மக்களின் உரிமைகளை எந்த அரசு ஆட்சியில் இருந்தாலும் மதிக்கவேண்டும். மக்களின் ஜனநாயக எழுச்சிப் போராட்டம்தான், அராஜக ராஜபக்ஷ ஆட்சிக்கு முடிவு கட்டியது. இதனைப் புதிய ஜனாதிபதி ரணில் உணர்ந்து செயற்படுவார் என்று நம்புகின்றேன் – என்றார்.

## வெள்ளவத்தைக் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சடலம் மீட்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் யார் என்று இதுவரை அடையாளம் காணப்படவில்லை என்று வெள்ளவத்தைப் பொலிஸார் தெரிவித்தனர்.

35 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்ட வயதுடைய குறித்த நபரின் சடலத்தில் காயங்கள் எதுவும் இல்லை என்று பொலிஸார் மேலும் கூறினர்.

## அழைப்பு இன்னும் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:–

தேசிய அரசு அல்லது சர்வகட்சி அரசு அமைப்பது தொடர்பில் அதிகாரபூர்வ அழைப்பு வரவில்லை. ஆனால், கட்சி தலைவர்கள் கூட்டத்தின்போது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்னிடமும், ஏனைய கட்சி தலைவர்களிடமும் நேரடியாக இது பற்றி கூறினார். ஆனால், கட்சிகளுக்கு சர்வ கட்சி அரசு அமைப்பது தொடர்பில், அரசிடமிருந்து அதிகாரபூர்வ அழைப்பு வரவேண்டும்.

அதன் பிறகு நாம் எமது கட்சிகள் மற்றும் தமிழ் முற்போக்குக் கூட்டணி அரசியல் குழுக்கள் மத்தியில் இதுபற்றி பேசுவோம். அதேபோல் ஐக்கிய மக்கள் கூட்டணி தலைமைக் குழுவிலும் பேசுவோம். இதுதான் ஒரு பொறுப்புள்ள நேர்மையுள்ள ஜனநாயக அரசியல் கட்சி செய்ய வேண்டிய முறைமை. அதை நாம் செய்வோம். எமது முடிவுகளை எமக்கு வாக்களித்து தெரிவு செய்துள்ள, எமது மக்களின் நலன்களை முன்னிட்டு, நாம் ஒற்றுமையாக எடுப்போம்.

அதேவேளை, நாடு இன்று இருக்கும் அவதி நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசுக்கு நாட்டை இயல்பு நிலைக்குக் கொண்டுவர அவகாசம் கொடுக்க வேண்டும். அவசரப்பட்டு எதிர்ப்பு அரசியல் ஆர்ப்பாட்டங்களை செய்யக்கூடாது. அதுவே எங்கள் மக்களின் நிலைப்பாடாகவும் இருக்கின்றது. பெரும்பான்மை அரசியல் கட்சிகளின் நலன்களைச் சார்ந்து மாத்திரம் தமிழ் முற்போக்கு கூட்டணி அரசியல் செய்யாது.

அரசில் சேருகின்றோமோ, இல்லையோ, புதிய அரசமைப்பு தொடர்பாக நியமிக்கப்பட்டுள்ள அமைச்சருடன் நாம், மலையக தமிழ் இலங்கையர்களின் அரசியல் அபிலாகைளை முன்வைப்போம். அடுத்து வரும் அரசமைப்பு திருத்தத்தில் எமது மக்களின் எதிர்பார்ப்புகளை இடம்பெறச் செய்ய எம்மால் ஆனதை நாம் பொறுப்புடன் செய்வோம் – என்றார்.

## விரைவில் சீனாவுக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளிட்ட விடயங்களில் ஒத்துழைப்பு குறித்து கலந்துரை யாடுவதற்காக அவர் சீனாவுக்கு விஜயம் செய்யத் திட்டமிட்டுள்ளார் .

மேலும் கொழும்பிலும், அம்பாந்தோட்டையிலும் சீனாவின் ஆதரவுடன் கூடிய பரந்த துறைமுகத் திட்டங்களுக்கு மேலதிக முதலீட்டை மேற்கொள்வதன் மூலம் பீய்ஜிங், இலங்கைக்கு உதவ முடியும் என்றும் தூதுவர் பாலித கொஹொன குறிப்பிட்டுள்ளார் .

இதேவேளை, சீனா தொடர்பில், புதிய அரசின் கொள்கையில் எந்த அடிப்படை மாற்றமும் ஏற்படாது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## மாகாணத் தேர்தலாவது நடக்கட்டும்

தற்போதைய நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் முடிவடையும் வரை – அது முற்கூட்டியே – கலைக்கப்பட மாட்டாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வலதுகரமான அமைச்சர் மனுஷ நாணயக்கார கூறி இருக்கின்றார்.

தற்போதைய அமைச்சரவை தற்காலிகமானது. இரண்டு வாரங்களுக்கு சர்வ கட்சி அரசு உருவாகிவிடும். அதன் கீழ் புதிய அமைச்சரவை பொறுப்பேற்கும். அந்த அரசு அடுத்த இரண்டரை ஆண்டுகளுக்கும் நீடிக்கும். அந்த அரசின் பதவிக் காலத்தில் நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைக்கு ஓரளவு தீர்வு காணப்படும். அதன் பின்னர்தான் தேர்தல் – என்று அரசின் நிலைப்பாட்டைத் தெளிவாகவும் வெளிப்படையாகவும் கூறிவிட்டார் வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார.

ரணில் அரசின் நிலைப்பாடு இதுதான் என்பது பரகசியமான விவகாரம். உடனடித் தேர்தல் ஒன்று நடத்தினால் தங்களின் எதிர்காலம் காலாவதியாகி விடும் என அஞ்சிய ஆளும் மொட்டுக்கட்சி உறுப்பினர்களுக்கு அத்தகைய தேர்தல் ஒன்றுக்குப் போக மாட்டேன், அதற்கு இடமளிக்க மாட்டேன் என்று வாக்குறுதி வழங்கித்தான் அந்தத் தரப்பின் பெரும்பாலான எம்.பிக்களின் ஆதரவை பெற்று ஜனாதிபதித் தெரிவில் தமது வெற்றியை உறுதிப்படுத்தினார் ரணில் விக்கிரமசிங்க.

அவரின் பதவிக்காலம் இன்னும் இரண்டேகால் வருடங்கள் உள்ளன. ஆகவே அதுவரை தற்போது நாடாளுமன்றத்தை கலைத்துத் தனக்கு அரசியல் தலையிடியை வாங்க அவர் முயலமாட்டார்.

போதாக்குறைக்கு 22 ஆவது அரசமைப்பு திருத்தம் நாளை நாடாளுமன்றத்துக்கு வருகின்றது. அதன் கீழ் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் பல அதிகாரங்கள் வெட்டிக் குறைக்கப்படவுள்ளன. நாடாளுமன்றத் தேர்தல் நடந்து முடிந்து நான்கரை ஆண்டு காலம்வரை, அந்த நாடாளுமன்றம் தானாக பிரேரணை ஒன்றின் மூலம் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் ஆதரவுடன் கோரினாலே ஒழிய சபை கலைக்கப்படக் கூடாது என்ற 19 ஆவது திருத்தத்தின் சரத்துக்கள் இந்த 22 இலும் சேர்க்கப்படுமானால், நாடாளுமன்றத்தை ஜனாதிபதி நினைத்தாலும் முற்கூட்டிக் கலைக்க முடியாமல் போய்விடும்.

நாடாளுமன்றத்தை உடன் கலைத்து பொதுத் தேர்தல்களை நடத்தலாம், நடத்துங்கள் என்று சுமந்திரன் போன்றோர் கோரினாலும் கூட அது சாத்தியப்படுவதற்கும் சந்தர்ப்பங்கள் குறைவு. எனினும் நீண்ட காலம் நடத்தப்படாமல் நிலுவையில் இருக்கும் மாகாண சபைத் தேர்தல்கள் மற்றும் உள்ளூராட்சி தேர்தல்களை தேசியமட்ட வாக்களிப்பு போல முன்னெடுக்க முடியும்.

மாகாண சபைத் தேர்தல்கள் கடந்த மூன்று, நான்கு ஆண்டுகளாக நடத்தப்படாமல் இழுபடுகின்றமைக்குத் அத்தேர்தல் தொடர்பான சட்டத்தை ரணிலின் முன்னைய நல்லாட்சி அரசு கண்மூடித்தனமாக ரத்துச் செய்தமையே காரணம். அந்த வரலாற்றுத் தவறுக்கு பிராயத்தித்தம் செய்து செய்வது போல உடனடியாக மாகாண சபைத் தேர்தல்கள் மற்றும் உள்ளூராட்சித் தேர்தல்களை ரணிலின் அரசு முன்னெடுக்கலாம். அதற்கு வாய்ப்பும் வசதியும் சூழலும் உள்ளன.

ரணிலின் ஐ.தே.கட்சியின் கீழ்மட்ட உறுப்பினர்கள் போக்கிடம் தெரியாமல் மொட்டுக்குப் பின்னால் அலைந்து கொண்டு திரிகிறார்கள். மாகாண சபை மற்றும் உள்ளூராட்சித் தேர்தல்களை ரணிலின் அரசு நடத்தினால் அவர்களையாயினும் ஆக்கபூர்வமான அரசியல் செயற்பாட்டில் ஈடுபடுத்த முடியும். ரணிலின் அரசு மக்கள் மனநிலையைப் புரிந்து கொண்டு குறைந்தபட்சம் இந்த இரண்டு தேர்தல்களையாவது விரைந்து நடத்துவதற்கு முன் வர வேண்டும்.

# பொருளாதார வரலாற்றில் மற்றுமொரு கறுப்பு நாள்!

## சம்பிக்க ரணவக்க சுட்டிக்காட்டு



இலங்கையின் பொருளாதார வரலாற்றில் மற்றுமொரு கறுப்பு நாள் பதிவாகியுள்ளது என முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கடந்த 2012 ஆம் ஆண்டில் மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தால் பெற்றுக்கொண்ட 100 கோடி ரூபா பிணை முறி காலாவதியான போதிலும் அதற்கு செலுத்த போதியளவு பணம் கையிருப்பில் இல்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

ராஜபக்ஷர்கள் இந்த நாட்டை வங்குரோத்து நிலைக்கு இட்டுச் சென்றனர் எனத் தெரிவித்துள்ளார்.

பிழையான அபிவிருத்தித் திட்டங்களுக் காககூடுதல்வட்டிக்குகடன்பெற்றுக்கொள்ளப் பட்டது என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதன்காரணமாக மக்கள் இன்று எரிவாயு, எரிபொருள் இன்றி வீதிகளில் வரிசையில் காத்திருக்க நேரிட்டுள்ளது என கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் சம்பிக்க குறிப்பிட்டுள்ளார்.

# கடலுணவு ஏற்றுமதியாளர்களிடம் டொலர் பெறுவது குறித்து ஆராய்வு

## நடத்தினார் அமைச்சர் டக்ளஸ்



இலங்கையின் கடற்றொழிலாளர்களின் தொழில் செயற்பாடுகளுக்கு எரிபொருள் தட்டுப்பாடு பெரும் சவாலாக காணப்படுகின்றது.

இது தொடர்பாக ஆராய்வதற்காக கடலுணவு ஏற்றுமதியாளர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினரை சந்தித்து கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துரையாடியுள்ளார்.

இந்த கலந்துரையாடலில், கடற்றொழிலாளர்களின் தொழில் செயற்பாடுகளுக்குத் தேவையான எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கான டொலர்களை ஏற்றுமதியாளர்கள் வழங்கி ஒத்துழைக்க வேண்டும்என்றகோரிக்கையைகடற்றொழில் அமைச்சர் ஏற்றுமதியாளர்களிடம் முன்வைத்துள்ளார்.

இதேவேளை ஏனைய விடயங்கள் தொடர்பாகவும் இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# உள்நாட்டு நிர்ப்பந்தங்களை கருத்திற்கொண்டு வெளிநாட்டு உறவுகளை நகர்த்த எதிர்பார்ப்பு!

## அலி சப்றி கூறுகிறார்

உள்நாட்டு நிர்ப்பந்தங்களையும் கருத்தில் கொண்டு, இலங்கையின் வெளிநாட்டு உறவுகளை முன்னெடுத்துச் செல்வதற்கான அமைச்சின் ஆணையை செயற்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளதாக வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்றி தெரிவித்துள்ளார். வெளிநாட்டலுவல்கள் அமைச்சில் உத்தியோகபூர்வமாக கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டதன் பின்னர், அதிகாரிகள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

உள்நாட்டு நிர்ப்பந்தங்களையும் கருத்தில் கொண்டு, இலங்கையின் வெளிநாட்டு உறவுகளை முன்னெடுத்துச் செல்வதற்கான அமைச்சின் ஆணையை செயற்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளேன்.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சுக்கு இதுவரை வழங்கப்பட்ட தலைமைத்துவத்துக்காக முன்னாள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸுக்கு பாராட்டுக்கள்.

அமைச்சர் அலி சப்றி, நீதி அமைச்சராக பணியாற்றிய கால கட்டத்தில் பல முக்கிய சட்ட திருத்தங்களை மேற்கொண்டுள்ளதோடு, நிதியமைச்சராக சேவையாற்றிய போது, வொஷிங்டனில் நடைபெற்ற சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியுடனான சமீபத்திய பேச்சுகளுக்கான இலங்கையின் தூதுக் குழுவை அவர் வழிநடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# திருமலையில் நாளை மாலை தியாகிகளுக்குநினைவஞ்சலி



திருகோணமலையில் உள்ள வெலிக்கடைத்தியாகிகள் நினைவு அரங்கில் நினைவஞ்சலி நிகழ்வு, நாளை புதன்கிழமை மாலை 5.30மணிக்கு இடம்பெறவுள்ளது.

1983ஆம் ஆண்டு, ஜூலை 25, 27ஆம் திகதிகளில் வெலிக்கடை சிறையில் படுகொலை செய்யப்பட்ட குட்டிமணி, தங்கதுரை, ஜெகன் உட்பட 53 வீர மறவர்களினதும் நினைவாக அமைக்கப்பட்ட இந்தத் தியாகிகள் அரங்கில் நினைவஞ்சலி நிகழ்வு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# போப் பிரான்சிஸ் பூர்வக்குடிகள் மீது நிகழ்த்தப்பட்ட இனப் படுகொலைகளுக்கு மன்னிப்பு கோரினார்



கனடாவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளபோப்பிரான்சிஸ், அங்குள்ள பூர்வக்குடிகள் மீது நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலைக்கு மன்னிப்பு கோரினார். கனடா சென்றுள்ள போப் பிரான்சிஸ் அல்பெடா பகுதியில் கிறிஸ்தவ பள்ளிகள் அமைந்து இருந்த இடத்திற்கு சென்றார். அங்கு நடைபெற்ற கூட்டத்தில் பேசிய அவர், ரோமன் கத்தோலிக்க பள்ளிகளில் பயின்ற பூர்வக்குடி குழந்தைகள் மீதான வன்முறைகளுக்கும் மன்னிப்பு கேட்டார். அந்த சம்பவத்திற்கு ஆதரவாக இருந்தவர்களின் காலனி ஆதிக்க மனநிலைக்கு மன்னிப்பு கோருகிறேன் எனவும் அவர் பேசினார். தீய செயல்களுக்கு மன்னிப்பு கோரும் யாத்திரை என இதனை முன்பே குறிப்பிட்டு இருந்த போப், இந்த பயணத்தின் முதல்படியே மன்னிப்பு கோருவது தான் என்றார்.

கனடாவில் கத்தோலிக்க பள்ளிகள் அமைந்திருந்த இடங்களில் கடந்த ஆண்டு ஆயிரக்கணக்கான குழந்தைகளின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டன. உலகை உலுக்கிய இந்த சம்பவத்தில் அந்த சடலங்கள் அங்குள்ள பூர்வக்குடிகள் மீதான இனப்படுகொலை என்று கண்டனம் எழுந்தது. இந்த நிலையில் தான் பூர்வக்குடிகள் மீதான தாக்குதலுக்கு போப் பிரான்சிஸ் மன்னிப்பு கோரியுள்ளார். ஆனால் போப் பிரான்சிஸ் காலம் கடந்து மன்னிப்பு கோரி இருக்கிறார் என பூர்வக்குடி மக்கள் தெரிவித்துள்ளனர்.

## சிங்கப்பூருக்கு செல்லும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையில் இந்தியாவுக்கு இரண்டாம் இடம்



சிங்கப்பூருக்கு செல்லும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் பட்டியலில் இந்தியா 2ம் இடத்தை பிடித்துள்ளது. இந்த ஆண்டு ஏப்ரல் முதல் கொரோனா தடுப்பூசி செலுத்திக் கொண்ட அனைத்து வெளிநாட்டு பயணிகளுக்காகவும் சிங்கப்பூர் நாடு அதன் எல்லைகளை மீண்டும் திறந்துள்ளது. இதன் காரணமாக சிங்கப்பூருக்கு வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வருகை 12 மடங்கு அதிகரித்துள்ளதாக அந்நாட்டு சுற்றுலா வாரியம் தகவல் அளித்துள்ளது. நடப்பாண்டின் முதல் 6 மாதங்களில் 15 லட்சம் சுற்றுலா பயணிகள் வந்துள்ளதாகவும் இதே காலகட்டத்தில் கடந்த ஆண்டை காட்டிலும் சுற்றுலா பயணிகள் வருகை 12 மடங்கு அதிகமாகும் என்றும் சுற்றுலா வாரியம் தெரிவித்துள்ளது. குறிப்பாக சிங்கப்பூருக்கு செல்லும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் பட்டியலில் இந்தியா 2ம் இடத்தில் உள்ளதாக அந்நாட்டு சுற்றுலா வாரியம் குறிப்பிட்டுள்ளது.

இந்த ஆண்டு முதல் 6 மாதங்களில் 2,19,000 இந்தியர்கள் சிங்கப்பூர் சென்றுள்ளனர். சிங்கப்பூருக்கு செல்லும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் பட்டியலில் இந்தோனேஷியா முதலிடத்தில் உள்ளது. ஜனவரி – ஜுன் வரையிலான காலத்தில் 2,82,000 இந்தோனேஷியர்கள் அங்கு சென்றுள்ளனர். மேலும் சிங்கப்பூருக்கு செல்லும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் பட்டியலில் மலேசியா 3ம் இடத்திலும் ஆஸ்திரேலியா 4ம் இடத்திலும் பிலிப்பைன்ஸ் 5ம் இடத்திலும் உள்ளன. இந்த ஆண்டு முதல் 6 மாதத்தில் 139,000 மலேசிய மக்களும் 125,000 ஆஸ்திரேலிய மக்களும் 81,000 பிலிப்பைன்ஸ் மக்களும் சிங்கப்பூர் சென்றுள்ளனர். 2022ம் ஆண்டின் ஜனவரி முதல் ஜுன் வரையிலான காலப்பகுதியில் 56 சதவீதத்திற்கும் அதிகமான சர்வதேச சுற்றுலா பயணிகள் மேற்குறிப்பிட்ட முதல் ஐந்து நாடுகளையேச் சேர்ந்தவர்கள் என்று சுற்றுலா வாரியம் குறிப்பிட்டுள்ளது.



## பல நாடுகளில் பரவுகின்றது குரங்கு அம்மை நோய் தொற்று

### உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை!

குரங்கு அம்மை நோய் தொற்று உலகமே எதிர்பார்க்காத வேகத்தில் பரவி வருவதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. டெல்லியில் பேட்டி அளித்த உலக சுகாதார அமைப்பின் இந்திய மண்டல இயக்குநர் பூனம் கேத்ராப்பால் இந்த எச்சரிப்பு செய்தியை அறிவித்துள்ளார். 75 நாடுகளில் குரங்கு அம்மை நோய் பரவி வரும் சூழலில், இதுவரை குரங்கு அம்மை நோய் பதிவாகாத நாடுகளிலும் பரவத் தொடங்கி இருப்பதாக தெரிவித்துள்ளார். பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பையும் தாண்டி குரங்கு அம்மை தொற்று அதி வேகத்தில் பரவி வருவது உறுதியாகி இருப்பதாக பூனம் தெரிவித்துள்ளார். எனவே இந்தியா உடனடியாக குரங்கு அம்மை நோய் தடுப்பு நடவடிக்கைகளைதுரிதப்படுத்த வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

கடந்த சில ஆண்டுகளில் குரங்கு அம்மை வைரஸ் தன்னை உருமாற்றிக் கொண்டு இருப்பதாக கூறி இருக்கும் உலக சுகாதார அமைப்பின் இந்திய மண்டல இயக்குநர் பூனம், இதனை மரபியல் ஆய்வுகள் நிரூபித்துள்ளன என்றும் குறிப்பிட்டுள்ளார்.

குரங்கு அம்மை வைரஸின் பரிணாமத்தை கண்டறிய கூடுதல் ஆய்வுகள் தேவை என்றும் அவர் வலியுறுத்தி உள்ளார். குரங்கு அம்மை நோய் உடல் உறவுகள் உட்பட எல்லாவித நெருக்கமான தொடர்புகள் வழியாகவும் பரவக் கூடியது என்றும் அவர் கூறியுள்ளார். துணிகள், படுக்கைகள், மின்னணு பொருள்கள் மூலமாகவும் குரங்கு அம்மை பரவும் என்று பூனம் எச்சரித்துள்ளார்.

## கென்யாவில் கவிழ்ந்தது பஸ் 30 பேர் பரிதாபகரமாக உயிரிழப்பு




ஆபிரிக்க நாடான கென்யாவின் கிழக்கு பகுதியில் உள்ள மெரு நகரில் இருந்து கடற்கரை நகரமான மொம்பாசாவுக்கு நேற்று முன்தினம் 50க்கும் மேற்பட்ட பயணிகளுடன் பேருந்து ஒன்று பயணம் மேற்கொண்டது.

மெருநைரோபி நெடுஞ்சாலையில் உள்ள ஆற்றுபாலம் மீது அந்த பேருந்து சென்று போது திடீரென ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து பாலத்தின் கீழ் ஓடும் ஆற்றில் கவிழ்ந்தது. இந்த கோர விபத்தில் பஸ்ஸில் பயணம் செய்த 20 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகினர். மேலும் 10 பேர் மருத்துவமனையில் உயிரிழந்தனர் என மெரு மாவட்ட ஆணையர் நோர்பர்ட் கொமோரா செய்தியாளர்களிடம் தெரிவித்தார். காயமடைந்த 20க்கும் மேற்பட்டோர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

உயிரிழந்தவர்களின் உடல்கள் மீட்கப்பட்ட நிலையில், காணாமல் போனவர்களை தேடுதல் பணி தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும், அவர் குறிப்பிட்டுள்ளார். விபத்துக்கான காரணம் குறித்து விசாரணைகள் தொடங்கி உள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளனர்.



## இங்கிலாந்துக்கு நாட்டுக்கு சீனா அச்சுறுத்தல் என்கிறார் ரிஷி சுனக்

இங்கிலாந்தில் பிரதமர் பதவிக்கு போட்டியிடும் இந்திய வம்சாவளியை சேர்ந்த முன்னாள் நிதி மந்திரி ரிஷி சுனக், ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சி உறுப்பினர்களின் ஆதரவை திரட்ட தீவிர பிரசாரம் மேற்கொண்டு வருகிறார். இந்த நிலையில் நேற்று தலைநகர் லண்டனில் நடைபெற்ற பிரசார கூட்டத்தில் பங்கேற்று ரிஷி சுனக் பேசியதாவது:-

சீனாவும், சீன கம்யூனிஸ்ட் கட்சியும் இந்த நூற்றாண்டில் இங்கிலாந்து மற்றும் உலகின் பாதுகாப்பு மற்றும் செழுமைக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக உள்ளன. அமெரிக்கா முதல் இந்தியா வரையிலான நாடுகளை சீனா குறிவைப்பதற்கான ஆதாரங்கள் உள்ளன. எனவே சீனாவின் அச்சுறுத்தல்களை சமாளிக்க உலகின் பல நாடுகளை உள்ளடக்கிய ஒரு பரந்த கூட்டணியை என்னால் உருவாக்க முடியும் என்று நம்புகிறேன். சீன இணைய அச்சுறுத்தல்களை சமாளிக்கவும் தொழில்நுட்ப பாதுகாப்பில் சிறந்த நடைமுறையைப் பகிர்ந்து கொள்ளவும் சுதந்திர நாடுகளின் புதிய சர்வதேச கூட்டணியை நான் உருவாக்குவேன். சீனா இங்கிலாந்து தொழில்நுட்பத்தைத் திருடி வருகிறது. அதை தடுப்பதற்கு இங்கிலாந்தில் உள்ள அனைத்து சீன நிறுவனங்களையும் நான் மூடுவேன். இவ்வாறு ரிஷி சுனக் பேசினார்.

## குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவுடன் இணைந்து பணியாற்ற தயார் என்கிறார் அதிபர் ஜின்பிங்

குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவுடன் இணைந்து பணியாற்ற சீனா தயாராக உள்ளது என்று சீன அதிபர் ஜின்பிங் கூறியுள்ளார். ஆரோக்கியமான மற்றும் நிலையான உறவு இந்தியா-சீனா இடையேயான அடிப்படை நலன்களுக்கு உதவுகிறது என அவர் தெரிவித்துள்ளார்.



# உணவுப்பொருள்களுக்கான ஜி.எஸ்.டியை திரும்பப் பெறக் கோருகிறார் கெஜ்ரிவால்



ஆம் ஆத்மி கட்சியின் தேசிய ஒருங்கிணைப்பாளரும் டெல்லி முதலமைச்சருமான அரவிந்த் கெஜ்ரிவால், கட்சித் தொடர்களுடன் நேற்று காணொ–லி வாயிலாக உரையாடியிருந்தார். இமாச் சல் பிரதேச சோலன் நகர ஆம் ஆத்மி உறுப்பினர்களுடனான இந்த உரையாடலில் பஞ்சாப் முதலமைச்சர் பகவந்த் மானும் கலந்துகொண்டார்.

இந்த உரையாடலில், டெல்லியில் மருத்துவ சிகிச்சை, தண்ணீர், மின்சாரம் போன்றன இலவசமாகக் கிடைக்கின்றன. ஊழலை ஒழித்ததால் இதையெல்லாம் சாத்தியமாக்க முடிந்துள்ளது. நாங்கள் எந்த வரியையும் உயர்த்தவில்லை. உயர்த்தப்பட்ட ஜி.எஸ்.டியை மத்திய அரசு திரும்பப் பெற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன், என்று அரவிந்த் கெஜ்ரிவால் தெரிவித்திருக்கிறார்.

இமாச்சல் பிரதேசத்தில் ஆம் ஆத்மி அரசாங்கத்தை உருவாக்குங்கள், பணவீக்கத்திலிருந்து நாங்கள் உங்களுக்கு நிவாரணம் தருவோம். இன்று மக்கள் பணவீக்கத்தால் கலக்கமடைந்துள்ளனர். மத்திய அரசு தயிர், கோதுமை, அரிசி மற்றும் பிற உணவுப் பொருள்களுக்கும் ஜி.எஸ்.டியை விதித்துள்ளனர். ஆங்கிலேயர்களும் அவ்வாறே செய்து வந்தனர், எனவும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

## தெலுங்கானாவில் ஒருவருக்கு குரங்கு அம்மை தொற்று உறுதி

### பாதிப்பு எண்ணிக்கை ஐந்தாக உயர்வு




இந்தியாவில் குரங்கு அம்மை நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை ஐந்தாக உயர்ந்துள்ளது. கடந்த இரு ஆண்டுகளாக உலக நாடுகளை அச்சுறுத்தி வந்த கொரோனாத் தொற்று, தற்போது கட்டுக்குள் வந்துள்ளது. ஆயினும், ஆபிரிக்காவில் புதிதாக உருவான குரங்கம்மை நோய், தற்போது உலகம் முழுவதும் பரவி வருகிறது.

இந்தியாவில் இந்த நோய் பாதித்த முதல் நபர், கடந்த 14 ஆம் திகதி கேரளாவில் கண்டறியப்பட்டார். இதேபோல், வெளிநாடுகளில் இருந்து கேரளாவுக்கு வந்த மேலும் இருவருக்கும் இந்த நோய்த் தொற்றுள்ளமை தெரியவந்துள்ளது. அவர்களுக்கு மருத்துவமனையில் தனிமைப்படுத்தப்பட்டு, தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்தநிலையில், டெல்லியிலும் ஒருவருக்கு நேற்று குரங்கம்மைப் பாதிப்பு உறுதியாகியுள்ளது. அதனைத்தொடர்ந்து அங்கு அவர் தனிமைப்படுத்தப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். டெல்லியைத் தொடர்ந்து தெலுங்கானாவிலும் ஒருவருக்கு குரங்கு அம்மை நோய்த் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. குவைத்தில் இருந்து நாடு திரும்பிய 40 வயது நபருக்கே குரங்கு அம்மைத் தொற்றுப் பாதிப்பு இருப்பதாக மருத்துவர்கள் உறுதிசெய்துள்ளனர். இதன்மூலம், இந்தியாவில் குரங்கு அம்மையால் பாதித்தவர்களின் எண்ணிக்கை ஐந்தாக உயர்ந்துள்ளது.

## திருப்பதியில் உண்டியல் வருவாய் அதிகரிப்பு 1,500 கோடி ரூபாவை எட்டுமென எதிர்பார்ப்பு



திருப்பதியில் கொரோனா ஊரடங்கிற்குப் பிறகு பக்தர்கள் கூட்டம் அதிகரித்து வருகிறது. அதன் மூலம் உண்டியல் வருவாய் வெகுவாக அதிகரித்துள்ளது. கடந்த 5 மாதங்களில் மாதம் தோறும் உண்டியல் காணிக்கை 100 கோடி ரூபாவுக்கும் மேல் வசூலாகியுள்ளது என்று திருப்பதி தேவஸ் தான அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த மார்ச் மாதம் 128 கோடி ரூபா, ஏப்ரல் மாதத்தில் 127.5 கோடி ரூபா, மே மாதத்தில் 129.93 கோடி ரூபா, , ஜுன் மாதத் தில் 120கோடி ரூபா, , ஜுலை மாதம் இதுவரை 106 கோடி ரூபா உண்டியல்கள் மூலம் சேர்ந்துள்ளது.

இதே நிலை தொடரும் பட்சத்தில் இந்த ஆண்டு முடிவுக்குள் உண்டியல் வருவாய் 1,500 கோடி ரூபாவை எட்டும் என்று தேவஸ்தான அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது போக தங்கம், வெள்ளி, வைரம் பொன்றன தனியாக கணக்கில் சேர்க்கப்படும்.

திருப்பதியில் நேற்று 80,815 பக்தர்கள் தரிசனம் செய்தனர் என்றும், 31,562 பேர் முடி காணிக்கை செலுத்தினர் எனவும் 4.82 கோடி ரூபா உண்டியல்களில் காணிக்கையாக சேர்ந்ததாகவும் தேவஸ்தான தகவல்கள் தெரிவிக்கின்றன.



## கட்டண உயர்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழகம் முழுவதும் அ.தி.மு.கவினர் ஆர்ப்பாட்டம்

மின் கட்டண உயர்வு, சொத்து வரி உயர்வு, விலைவாசி உயர்வு, சட்டம் ஒழுங்கு சீர்கேடு உள்ளிட்ட விவகாரங்களில் தி.மு.க. அரசின் செயல்களைக் கண்டித்து அ.தி.மு.க. சார்பில் கட்சி அமைப்பு ரீதியான அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்த அக்கட்சியின் இடைக்காலப் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு வெளியிட்டிருந்தார்.

இதனையடுத்து, அனைத்து தமிழக மாவட்டத் தலைநகரங்களிலும் நேற்று ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றுள்ளன. ஆர்ப்பாட்டத்தில் ஆளும் தி.மு.க. அரசுக்கு எதிராக பதாகைகளை ஏந்தி அ.தி.மு.க. தொண்டர்கள் கோஷங்களை எழுப்பியிருந்தனர்.

## மாநிலங்களவை எம்.பியாக பதவியேற்றார் இளையராஜா



விளையாட்டு, சமூக சேவை, கலை, இலக்கியம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் சிறந்து விளங்குபவர்களில் 12 பேரை நியமன எம்.பிக்களாக மாநிலங்களவைக்கு ஜனாதிபதியால் அழைக்கமுடியும்.

அதன்படி தமிழகத்தைச் சேர்ந்த பிரபல இசையமைப்பாளர் இளையராஜா மாநிலங்களவை நியமன எம்.பியாக அறிவிக்கப்பட்டார். விளையாட்டுத்துறையில் சிறந்து விளங்கிய முன்னாள் தடகள வீராங்கனை பி.டி.உஷா, ஆந்திராவைச் சேர்ந்த திரைப்படக் கதாசிரியர் விஜயேந்திர பிரசாத் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டு எம்.பிக்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். கடந்த திங்களன்று அவர்கள் நாடாளுமன்றக் கூட்டத் தொடரின் போது நியமன உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டோர் பதவியேற்றுக்கொண்டனர்.

வெளிநாட்டிலிருந்ததால் இளையராஜா அன்றைய நாளில் பதவி ஏற்கவில்லை. அவர் நேற்று மாநிலங்களவை எம்.பியாக பதவியேற்றுக் கொண்டார். நாடாளுமன்றத்தின் மாநிலங்களவையில் தமிழில் இளையராஜா உறுதிமொழி ஏற்றுக்கொண்டார்.

# இந்துக் குருமாருக்கும் எரிபொருள் தங்கு தடையின்றி வழங்க வேண்டும்

## கிழக்கிலங்கை இந்துக் குருமார் ஒன்றியம் வலியுறுத்து

(கல்லடி நிருபர்)

தற்பொழுது நாட்டில் நிலவுகின்ற எரிபொருள் பற்றாக்குறை காரணமாக எங்களுடைய சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அந்தச் சமூகத்துக்குச் சேவையாளனாக விளங்குகின்ற குருமார்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் மற்றும் ஏனைய பிரச்சினைகள் சம்பந்தமாக நாங்கள் அரச மட்டத்திற்கு கொண்டு செல்வதற்காகவே இவ் ஊடகச் சந்திப்பை ஒழுங்கு செய்துள்ளோமென கிழக்கிலங்கை இந்துக் குருமார் ஒன்றியத்தின் செயலாளர் சிவஸ்ரீ சி. குகநாதஐயர் தெரிவித்தார்.

இந்த ஊடகச் சந்திப்பு மட்டக்களப்பு மஞ்சந்தொடுவாயில் அமைந்துள்ள கிழக்கிலங்கை இந்துக் குருமார் ஒன்றியத் தலைமைக் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்றது.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் குறிப்பிட்டவை வருமாறு:-

எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருள் பெறுவதற்காகக் குருமார் செல்லும் போது, அங்கே குருமார்கள் புறக்கணிக்கப்படுவதும், சமூகத்தால் வெறுத்து ஒதுக்கப்படுவதுமான செயற்பாடுகளால் அவர்கள் எரிபொருளைப் பெறாமலேயே வீடு செல்லும் நிலையே காணப்படுகிறது. இதனை ஒட்டி மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி ஸ்ரீகாந்துக்கு கடந்த மாதம் எமது ஒன்றியத்தால் பல கோரிக்கைகள் அடங்கிய கடிதம் ஒன்றை கையளித்திருந்தோம். இதன்போது மேலதிக அரசாங்க அதிபரால் நாட்டிற்கு எரிபொருள் வருகின்ற போது, உங்களுக்குத் தேவையான எரிபொருளை வழங்குவதற்கு குறிப்பிட்ட எரிபொருள் நிலையங்களுக்கு அறிவுறுத்தல் வழங்குவோம் என்ற உறுதி மொழி வழங்கப்பட்டது.

தற்போது அனைத்து எரிபொருள் நிலையங்களுக்கும் போதியளவு எரிபொருள் வந்து கொண்டிருக்கிறது. அதனை மக்களும் தங்களது வாகன இலக்கத் தகட்டின் கடைசி இலக்கத்துக்கமைய பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். இதன்போது பல முறைகேடுகளும் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன.

இந்நிலையில் இந்துக் குருமார்கள் தமது பூசைக் கடமைகளுக்காகவும், சமூக மேம்பாட்டுக்காகவுமே எரிபொருளைப் பெறச் செல்கிறோம். மதவழிபாட்டை முன்னின்று நிகழ்த்த அனைவரும் முன்வருவதில்லை. ஒரு சிலரே முன்வருகின்றனர். எனவே அவர்கள் அக்கடமைகளைச் செவ்வனே நிகழ்த்த சமூகத்திலுள்ளவர்கள் உறுதுணையாகச் செயற்பட வேண்டும். அத்தோடு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பணிபுரியும் பொலிஸாரும் இடையூறாகச் செயற்படுகின்றனர். இவற்றோடு பௌத்த குருமார்களுக்கு வழங்கப்படும் உன்னதமான நிலை ஏனைய மதக் குருமார்களுக்கு வழங்கப்படுவதில்லை.

இனிவரும் காலங்களில் எமக்கான எரிபொருளை வழங்க இந்நாட்டின் ஜனாதிபதி, பிரதமர், அரச அதிகாரிகள் சம்பந்தப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்குப் பணிப்புரை வழங்க வேண்டும். அவ்வாறு செய்யாதபட்சத்தில் நாம் நீதி கோரி வீதிக்கிறங்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையேற்படுமென்றார்.




கிழக்கிலங்கை இந்துக் குருமார் ஒன்றியத் தலைவர் சிவஸ்ரீ கணேசலோகநாதக் குருக்கள் கருத்துத் தெரிவிக்கையில் குறிப்பிட்டவை வருமாறு:-

கொரோனாத் தொற்று காலத்தில் இந்துக் குருமார்கள் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் ஆலய பூசை வழிபாடுகளை உரிய வகையில் நிகழ்த்தினர். இந்நிலையில் எரிபொருள் நெருக்கடிக்கு மத்தியில் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று பூசை வழிபாடுகளை நிகழ்த்த வேண்டியுள்ளது. இந்நிலையில் எரிபொருள் நிரப்பச் செல்கையில் பல்வேறு இடர்கள், இன்னல்கள் மற்றும் கசப்பான சம்பவங்களை எதிர்கொள்கின்றனர். எரிபொருள் நிலையங்களில் சமூகத்திலுள்ள ஏனையோர் போன்று வரிசையில் நின்று எரிபொருள் பெற முடியாது. ஏனெனில் காலை, மதியம், பிற்பகல் பூசை வழிபாடுகளை நிகழ்த்த செல்ல வேண்டியுள்ளது.

ஒரு குருவானவர் ஐந்து, ஆறு ஆலயங்களுக்குச் சென்று பூசை செய்ய வேண்டியுள்ளது.


இந்நிலையில் எரிபொருள் உரிய வேளையில் கிடைக்காத பட்சத்தில் பூசை வழிபாடுகளை உரிய காலவேளையில் நிகழ்த்த முடியாமல் போய் விடும். இதனால் தெய்வக் குற்றத் துக்கு ஆளாக வேண்டியேற்படும்.

மதத்தை இழிவுபடுத்தும் செயற்பாடுகளில் சில அரச அதிகாரிகள் ஈடுபடுகின்றனர். இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். இத்தகையோருக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். - என்றார்.

# வீடுடைத்துத் திருடியவர்கள் போதைப் பொருளுடன் கைது

## ஏறாவூர் பிரதேசத்தில் சம்பவம்





மட்டக்களப்பு ஏறாவூர் பிரதேசத்தில் வீட்டை உடைத்து அங்கிருந்து எட்டேகால் பவுண் தங்க ஆபரணங்களைத் திருடிச் சென்றவர்கள் என்று கூறப்படும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 2 பெண்கள், 3 ஆண்கள் உட்பட 5 பேரை நேற்றுத் திங்கட்கிழமை கைது செய்துள்ளமையுடன் இதில் கைது செய்யப்பட்ட இரு ஆண்கள் மற்றும் ஒரு பெண்ணிடமிருந்து ஹெரோயின் போதைப் பொருளையும் தாங்கள் மீட்டுள்ளோம் என ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

ஏறாவூர் ஆர்.சி. வீதியிலுள்ள வீடு ஒன்றின் உரிமையாளர் கடந்த 11 ஆம் திகதி காலை 11.00 மணிக்கு வீட்டைப் பூட்டிவிட்டு குடும்பத்துடன் வெளியே சென்று அன்று அரவு 9.15 மணிக்கு வீடு திரும்பிய போது, வீட்டின் பின்பகுதி கதவை உடைத்து அங்கு வீட்டின் அறையில் அலுமாரியில் இருந்த எட்டேகால் பவுண் தங்க ஆபரணங்கள் சூறையாடப்பட்டிருந்தமையைக் கண்டார்.

இது தொடர்பாக பொலிஸாரிடம் முறைபாடு வழங்கியமையை அடுத்துப் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் நேற்றுத் திங்கட்கிழமை மிச்சுநகர்ப் பகுதியைச் சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 20,45 வயதுடைய பெண்கள் இருவரும், ஆண்கள் மூவரும் என 5 பேர் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட ஒரு பெண் மற்றும் 2 ஆண்களிடம் இருந்து ஹெரோயின் போதைப் பொருளைக் கைப்பற்றிய பொலிஸார் திருடப்பட்ட தங்க ஆபரணங்களையும் அவர்களிடமிருந்து மீட்டனர். அவர்களிடம் மேற்கொண்ட விசாரணையில் மூன்றரைப் பவுண் தங்க சங்கிலி மட்டக்களப்பு நகரில் நகைகடை ஒன்றில் அடகு வைத்திருந்த நிலையில் மீட்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.





# மட்டு. வாழைச்சேனையில் இடி மின்னல் தாக்குதல்

மட்டக்களப்பு - வாழைச்சேனையில் நேற்றுப் பிற்பகல் வேளை ஏற்பட்ட இடி மின்னல் தாக்கம் காரணமாக பிரதேசத்தில் மின்சாரப் பொருள்கள் பல சேதமடைந்துள்ளன.

வாழைச்சேனை விநாயகபுரத்தில் பிற்பகல் 1.30 மணியளவில் இரண்டு வீடுகளில் இச்சம்பவம் ஏற்பட்டுள்ளது. வளவில் உள்ள தென்னை மரங்களில் இடி மின்னல் தாக்கி தீப் பற்றியுள்ளது. தீ வீட்டின் கூரையின் மீது பரவியதை அடுத்து சம்பவம் அறிந்த அயலவர்கள் தீ பரவாமல் தடுத்துள்ளனர். இதனால் வீட்டில் பெரும் சேதம் ஏற்படாமல் தவிர்க்கப்பட்டுள்ளது.

இதேவேளை வீடுகளில் வசித்தோர் அச்சமயம் உறவினர்களின் வீடுகளுக்குச் சென்றிருந்ததால் உயிர்ச் சேதம் எதுவும் ஏற்படமால் தடுக்கப்பட்டுள்ளது.

எனினும் அந்தப் பிரதேசத்தில் பல வீடுகளில் பாவனையில் இருந்த மின்சாரக் கருவிகள், பொருள்கள் பல சேதமடைந்துள்ளன எனப் பிரதேச மக்கள் கவலை தெரிவித்தனர். அத்துடன் மக்கள் மத்தியில் அச்சமும் நிலவியது.

நேற்று மட்டக்களப்பு மாவட்டத்தில் பல இடங்களில் இருளுடன் கூடிய காலநிலை நிலவியமையுடன் தூறல் மழையும் பெய்து கொண்டிருந்தது.

# பெரும் பொருளாதார நெருக்கடியால் சீனாவிடம் உதவி கேட்கும் இலங்கை

## அந்நாட்டுக்கான இலங்கை தூதுவர் பாலித கோஹன தகவல்



வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலாத்துறைக்கு உதவுமாறு இலங்கை சீனாவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்நிலையில், பொருளாதார சரிவில் இருந்து மீள்வதற்கு உதவுவதற்காக அவசரகால உதவியாக 400 கோடி டொலர் நிதி பெற்றுக்கொள்வது தொடர்பில் பேச்சு நடத்தி வருவதாக சீனாவிற்கான இலங்கை தூதுவர் தெரிவித்தார்.

இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு சீனா ஒரு திறவுகோல் என சீனாவிற்கான இலங்கை தூதுவர் பாலித கோஹன வலியுறுத்தியுள்ளார். இலங்கையின் வெளிநாட்டுக் கடனில் 10 வீதம் சீனாவிடம் உள்ளது எனவும் கூறியுள்ளார்.

2 கோடியே 20 லட்சம் மக்களைக் கொண்ட இலங்கை 1948 இல் சுதந்திரத்திற்குப் பிறகு அந்நிய கையிருப்பு இல்லாமல் மோசமான பொருளாதார நெருக்கடியை அனுபவித்து வருகிறது. இலங்கையின் நிலை தொடர்பில் ரொய்ட்டர்ஸ் செய்தி சேவைக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் கறுப்பு தேநீர், மசாலா மற்றும் ஆடைகளை அதிகளவில் வாங்குமாறு சீனா தனது நிறுவனங்களைக் கேட்க வேண்டும் என்றும், சீன இறக்குமதி விதிகளை மிகவும் வெளிப்படையானதாகவும், எளிதாக செல்லவும் வேண்டும் என்று கொழும்பு விரும்புகிறது.

கொழும்பிலும் அம்பாந்தோட்டையிலும் சீனாவின் ஆதரவுடன் கூடிய பரந்த துறைமுகத் திட்டங்களுக்கு மேலதிக முதலீட்டை செலுத்துவதன் மூலம் பெய்ஜிங் உதவ முடியும் என்றார். கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக முக்கிய சீன முதலீட்டுத் திட்டங்கள் செயற்படுத்தப்படவில்லை என பாலித கோஹன தெரிவித்துள்ளார்.

கூடுதலாக, 2018 இல் 2 லட்சத்து 65 ஆயிரம் ஆக இருந்த சீன சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 2019 தற்கொலைத் தாக்குதல்கள் மற்றும் தொற்றுநோய்க்குப் பிறகு கிட்டத்தட்ட பூஜ்ஜியமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

இலங்கையின் புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலா உள்ளிட்ட விடயங்களில் ஒத்துழைப்பு தொடர்பாகக் கலந்துரையாடுவதற்காக சீனாவிற்கு விஜயம் செய்ய திட்டமிட்டுள்ளார் எனவும் பாலித கோஹன தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்க சீனாவுக்கு புதியவர் அல்லர். சீனா தொடர்பான புதிய அரசாங்கத்தின் கொள்கையில் எந்த அடிப்படை மாற்றமும் ஏற்படாது என்று தான் எதிர்பார்க்கிறேன் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு முக்கிய உலகளாவிய கடன் வழங்குநராக, நிதி நெருக்கடியில் உள்ள பலநாடுகளுக்கு நிதி ரீதியாக வெளிப்படும் காரணத்தால், இலங்கைக்கு உதவுவதற்கு சீனா விரைவாகச் செயற்படுவது கடினமாக இருப்பதைத் தாம் புரிந்து கொள்கிறோம் என அவர் கூறினார்.

ஒருவேளை அது இலங்கையாக இருந்திருந்தால், முடிவெடுப்பது மிகவும் எளிதாக இருந்திருக்கும். பல மாதங்களாக இலங்கை சீனாவில் 400 கோடி டொலர் உதவிப் பொதிக்கு பேச்சு நடத்தி வந்தது.

இந்த ஆண்டு செலுத்த வேண்டிய சீனக் கடனுக்கு ஏறக்குறைய சமமான தொகையை திருப்பிச் செலுத்த 100 கோடி டொலர் கடனாக இருந்தது. சீன இறக்குமதிகளுக்கு செலுத்த 150 கோடி டொலர் கடன் வரியையும் கேட்கிறது.

இந்த இறக்குமதிகள் முக்கியமாக பொத்தான்கள் மற்றும் ஜிப்பர்கள் போன்ற தனது நாட்டின் இலாபகரமான ஆடைத் தொழிலுக்குத் தேவையான உள்ளீடுகள் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார். 150 கோடி டொலர் இருதரப்பு நாணய பரிமாற்றத்தை செயற்படுத்த சீனாவை வற்புறுத்தவும் இலங்கை நம்புகிறது.

சீனாவுடனான நிதி உதவி தொடர்பாக விவாதங்கள் நடந்து வருகின்றன எனவும் ஆனால் அடுத்த சந்திப்புக்கான திகதி எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு உதவ பெய்ஜிங் மற்ற நாடுகள் மற்றும் சர்வதேச நிதி நிறுவனங்களுடன் இணைந்து நேர்மறையான பங்கை வகிக்கத் தயாராக இருப்பதாக சீன வெளியுறவு அமைச்சகம் இந்த மாதம் கூறியுள்ளது.

நிதி உதவிக்கு அப்பால், எரிபொருள், உரம் மற்றும் பிற அவசர தேவைப் பொருள்களை வாங்குவதற்கு சீனா உதவ முடியும் என இலங்கை நம்புகிறது. ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் இலங்கைக்கு 50 கோடி யுவான் அவசர உதவியாக வழங்க சீனா உறுதியளித்தது. எங்களுக்கான தேவை அதிகமாக இருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.






# திலீபனின் நினைவுத்தூபியில் கறுப்பு ஜூலை நினைவேந்தல்

கறுப்பு ஜூலை நினைவேந்தல் நேற்று (திங்கட்கிழமை) தியாகதீபம் திலீபனின் நினைவுத்தூபியில் நடைபெற்றது.

இந் நிகழ்வு தமிழ் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இதன்போது படுகொலை செய்யப்பட்ட இன்னுயிர்களை நினைவுகூர்ந்து ஈகைச்சுடர் ஏற்றி ஆத்மார்த்தமான ரீதியில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

# குரங்கு அம்மை நோய் இங்கும் பரவவாய்ப்பு?

## பேராசியர் சந்திம ஜீவந்தர எச்சரிக்கை

சர்வதேச போக்குவரத்து தொடர்புகள் எவையும் இன்றி குரங்கு அம்மை நோய் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் இனங்காணப்பட்டுள்ளது.

எனவே தான் உலக சுகாதார ஸ்தாபனத்தால் சர்வதேச பொது சுகாதார அவசர நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

குரங்கு அம்மை ஒரு வைரஸ் நோய் என்பதால் எந்நேரத்திலும் இலங்கையில் பரவக் கூடிய அபாயம் இருப்பதாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழத்தின் நோய் எதிர்ப்பு மற்றும் ஒவ்வாமை பிரிவின் பணிப்பாளர் பேராசியர் சந்திம ஜீவந்தர தெரிவித்தார்.

உலக சுகாதார ஸ்தாபனத்தால் சர்வதேச பொது சுகாதார அவசர நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிலையில், குரங்கு அம்மை நோய் தொடர்பாகத் தெளிவுபடுத்தும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

குரங்கு அம்மை வைரஸ் நோய் ஆரம்பத்தில் தென் ஆபிரிக்க நாடுகளில் மாத்திரம் இனங்காணப்பட்ட போதிலும், தற்போது அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளிலும் இனங்காணப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் இந்த நோய் சர்வதேச போக்குவரத்து தொடர்புகளின் ஊடாகவே பரவக் கூடியதாகக் காணப்பட்டது.

எனினும் தற்போது சர்வதேச போக்குவரத்துக்கள் இல்லாத சந்தர்ப்பங்களிலும் இனங்காணப்படுகிறது.

எனவே தான் உலக சுகாதார ஸ்தாபனத்தால் சர்வதேச பொது சுகாதார அவசர நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

ஐரோப்பிய நாடுகளில் இந்த நோயால் அதிகளவு ஆண்களே பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர் ஓரினச் சேர்க்கையாளர்கள் என்பது இனங்காணப்பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும் இவ்வாறான பாலியல் தொடர்புகள் ஊடாக இந்நோய் பரவுவதாக இதுவரையில் உறுதிப்படுத்தப்படவில்லை.

மாறாக, ஏற்கனவே இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களுடன் நெருங்கிப் பழகுதல் மற்றும் சுவாசத்தின் ஊடாகவே பரவுகின்றமை உறுதிப்படுத்தப்படுகிறது. குரங்கு அம்மை மனிதர்களிடமிருந்து மாத்திரமின்றி விலங்குகளிடமிருந்தும் பரவக் கூடும்.

இதன் அறிகுறிகளாக ஆரம்பகட்டத்தில் காய்ச்சலும் , பின்னர் உடற் தோல் பகுதியில் படர் தடிப்புக்கள் என்பன ஏற்படும். இவை இலகுவில் இனங்காணப்படக் கூடிய அறிகுறிகளாகும்.

இரு பிரதான பிறழ்வுகள் மூலம் இந்த நோய் பரவுகின்றது. மேற்படி பிறழ்வுகள் 10 சதவீதம் மரணத்தை ஏற்படுத்தக் கூடியவை.

இவற்றை பி.சி.ஆர். பரிசோதனை ஊடாக இனங்காண முடியும். அதற்கான வசதிகள் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் உள்ளிட்ட ஏனைய ஆய்வு கூடங்களிலும் காணப்படுகின்றன.

கொவிட் வைரஸுடன் ஒப்பிடும் போது , குரங்கு அம்மை வைரஸ் 50 ஆண்டுகள் பழைமையானதாகும். எனினும் இது கொவிட் தொற்றை விட குறைவான வேகத்திலேயே பரவக்கூடியது.

இதற்கான மருந்துகள் ஏற்கனவே கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. சின்னம்மை நோய்க்காக பயன்படுத்தப்படும் தடுப்பூசி, குரங்கு அம்மை நோய்க்கு எதிராக 85 சதவீதம் சாதகமாகப் பலன் தரக் கூடியது.

ஐரோப்பிய நாடுகளில் குரங்கு அம்மை நோய் பரவல் அதிகரித்துள்ளமையின் காரணமாகவே , ஏனைய நாடுகளைப் பாதுகாப்பு முன்னாயத் தங்களை மேற்கொள்ள ஊக்கப்படுத்தும் வகையில் உலக சுகாதார ஸ்தாபனத்தால் அவசர சுகாதார நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் இதுவரையில் இந்நோய் இனங்காணப்படவில்லை.

எவ்வாறிருப்பினும் இது ஒரு வைரஸ் நோய் என்பதால் , எந்த சந்தர்ப்பத்திலும் பரவக் கூடிய அபாயமும் காணப்படுகிறது. எனவே முகக் கவசம் அணிதல், நோய் அறிகுறிகள் காணப்படுபவர்களிடம் நெருங்கி பழகாதிருத்தல் என்பவற்றின் மூலம் இதனைத் தவிர்த்துக் கொள்ளலாம். – என்றார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.07.2022இல் வெளியிடப்பெற்றது.